மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆண்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண்களையும் சேர்த்துக்கொள்வதுபற்றி பல்கலைக் கழகம்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. பெண்களுக்கு என்று தனியாக சென்னையில் நான்கு கல்லூரிகளும் மற்ற இடங்களில் மூன்றும் இருக்கின்றன. இவர்களுக்குத் தனியாக சில வசதிகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது— Retiring room for women students, separate hostel and playground, appointment of a few women teachers on the staff of the college concerned and provision of a direct teaching in high schools, etc. அந்த அடிப்படையில் ஆண்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கான வகுப்புக்களைத் துவக்குவதற்கு வாய்ப்பு இல்லை.

கான்சாகிப் வாய்க்கால்மீது பாலம்

* 242 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகாவில், சிதம்பரம்-கிள்ளை சாலையில் நவரப்பேட்டை என்ற இடத்தில் கான் சாகிப் வாய்க்கால் மீது கட்டப்பட்டிருக்கும் மதகு பஸ் போக்குவரத்துக்கு ரொம்பவும் இடைஞ்சலாக இருப்பதால் அதை இடித்துவிட்டு பெரிய மதகாகக் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்விதமான செயற்குறிப்பு எதுவும் ஆய்வில் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்த மதகானது வண்டிகள், பஸ்கள் போவதற்கு மிகவும் வசதிக் குறைவாக இருப்பதனால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. சென்ற காலத்திலேயே இதுபற்றி ஆட்சியாளரிடத்தில் சொல்லப்பட்டது. உடனடியாக இந்த அரசானது அந்த மதகை எடுத்துவிட்டுப் பெரியதாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றி மாவட்ட வளர்ச்சி கௌன்சிலில் இருந்து பரிந்துரை எதுவும் இந்த அரசுக்கு வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்திற்கு வெள்ள நிவாரணம்

* 243 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு பெரும் மழையால் ஆறுகள் உடைப்பால் வெள்ளம் ஏற்பட்டதா ?

1967 ஜூலை 10]

(இ) ஆமெனில் எந்தெந்த தாலூகாக்களில் வெள்ளத்தால் சாகுபடி பயிர்களும், கதிரும் மூழ்கி விவசாயம் பாதிக்கப்பட்டது?

(உ) அவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன நிவாரணமளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, ஓரத்தநாடு தாலூகாக்கள்.

(உ) 1966-ல் ஏற்பட்ட வெள்ளத்தால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு நிவாரணம் ஏதும் அளிக்கப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: இப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு வரி வஜா செய்யவேண்டுமென்று அரசாங்கத்திடம் முறையிட்டார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் தீ விபத்துக்கள்

*244 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு ஜில்லாவில் 1966-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரையில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் எததனை?

(இ) அதனால் ஏற்பட்ட மொத்த நஷ்டம் எவ்வளவு?

(உ) தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் தொகை எவ்வளவு?

(எ) அதை அதிகப்படுத்தும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) 322.

(இ) ரூ. 3,17,034.

(உ) விபத்திற்குள்ளான ஒவ்வொருவருக்கும் சேதமடைந்த வீட்டை மறுபடியும் கட்டுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு 30 ரூபாய் ரொக்க மானியம் வழங்கப்பட்டது. இழந்த துணிகளுக்காகவும் பாத்திரங்களுக்காகவும் 10 ரூபாய் துணி மானியம் வழங்கப்பட்டது.

(எ) இல்லை.

குமரி மாவட்டத்தில் சங்கு குளிப்பு

*245 வினா.—திரு. எம். சி. பாலன்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் சிறு அளவில் நடைபெறும் சங்கு குளிக்கும் தொழிலை தீவிரப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இல்லை.